# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.12.27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# *காணி அபிவிருத்தி (திருத்தம்)*

***(464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*காணி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 18.00*** ***தபாற் செலவு : ரூபா 15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன்பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தை, "காணி ஆணையாளர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "காணி ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் திருத்துவதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய எண்ணிக்கை யினரான மேலதிகக் காணி ஆணையாளர்கள், பிரதிக் காணி ஆணையாளர்கள், உதவிக் காணி ஆணையாளர்கள் மற்றும் வேறு அலுவலர்களின் நியமனத்துக்காக ஏற்பாடுசெய்வதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் பிரதேச செயலாளரின் அங்கீகாரமின்றி பற்றுநிலத்தை ஈடுவைப்பதற்குப் பற்றுநிலத்தின் சொந்தக்காரரை இயலச்செய்கின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய 28 ஆம் பிரிவை உட்புகுத்துவதாகும். இப்புதிய பிரிவானது நில அளவையிடப்படாத காணிக்கான அளிப்பொன்றை வழங்குவதனைத் தடை செய்கின்றது.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட ஒரு வரைபடத்தைக் குறிப்பீடுசெய்து விபரிக்கப்படவேண்டிய அளிப்பொன்றின்மீது ஒரு காணி பராதீனப்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 8 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதுமாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம் 104அ,104ஆ, 104இ மற்றும் 104ஈ என்னும் புதிய பிரிவுகளை முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்துவதாகும். பொய்யான தகவலின்மீது பெற்றுக்கொள்ளப்பட்ட அளிப்பை இல்லாதாக்குவதற்கு இப்புதிய பிரிவுகள் சனாதிபதியை இயலச்செய்கின்றன.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் பற்றுநிலத்தைக் கையுதிர்க்கும்போது அல்லது ஈடுவைக்கும்போது பற்றுநிலத்தின் சொந்தக்காரரினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைமீது அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்குவதனை இயலச்செய்வதற்கென முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 10 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் மற்றும் 72 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காகப் பற்றுநிலம் அல்லது காணி ஒன்றின் உரித்து வந்தடைதல் தொடர்பான கருமத்துக்காக ஏற்பாடுசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துவதாகும்.*

*ச.வ.- ஓ. 25/2005*

## (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம், "காணி ஆணையாளர்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாகக் "காணி ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"மேலதிகக் காணி ஆணையாளர் களையும் மற்றும் வேறு அலுவலர் களையும் நியமித்தல்*

5. இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் காலத்துக்குக்காலம் தேவைப்படக்கூடியவாறான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிகக் காணி ஆணையாளர்கள், பிரதிக் காணி ஆணையாளர்கள், உதவிக் காணி ஆணையாளர்கள் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்கள் என்போர் நியமிக்கப்படலாம்.".

2-PL 012873-475 (2021/12)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(7) ஆறாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய பற்றுநிலத்தை ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு, அரச ஈட்டு, முதலீட்டு வங்கிக்கு, இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்துக்கு, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு, ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்துக்கு அல்லது வேறு விதித்துரைக்கப்பட்ட நிறுவனத்துக்கு ஈடுவைக்கும்போது பிரதேச செயலாளரின் அங்கீகாரம் தேவைப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 28 ஆம் பிரிவை உட்புகுத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"நில அளவையிடப்படாத காணிக்கான அளிப்பு வழங்கப் படுதலாகாது*

28. நில அளவையாளர் தலைமையதிபதியினால் நில அளவையிடப்பட்டிராத அரச காணி ஓர் அளிப்பின்மூலம் பராதீனப்படுத்தப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"அளிப்புடன் வரைபடம் இணைக்கப் படுதல் வேண்டும்*

30. ஏதேனும் அளிப்பின்மீது பராதீனப்படுத்தப்பட்ட காணி, நில அளவையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் தயாரிக்கப்பட்டதும் அவரது பொறுப்பில் வைத்திருக்கப்பட்டதுமானவொரு வரைபடத்தைக் குறிப்பீடு செய்து விவரிக்கப்படுதல் வேண்டும். நில அளவை

யாளரினால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட வரைபடம் ஒவ்வோர் அளிப்புடனும் இணைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"சனாதிபதி, அளிப்பை இல்லாதாக்கலாம்

104. சனாதிபதி பின்வருமாறு இருந்துள்ளதெனத் திருப்திப்படுமிடத்து, ஒரு பற்றுநிலத்தின் அளிப்பை இல்லாதாக்கிச் சனாதிபதியானவர் கட்டளை ஆக்கலாம்:-

(அ) ஒன்றில் அடுத்துறுவதற்குச் சட்டமுறையாக உரித்துள்ள ஆளெவரும் இல்லாமை காரணமாக அல்லது அவ்வாறு உரித்துள்ள ஆளெவரும் அடுத்துறுவதற்கு விரும்பாமை காரணமாக அதற்கான அடுத்துறுகையிலான தவறுதல் இருந்துள்ளதென்றும்; அல்லது

(ஆ) அளிப்பானது பொய்யான தகவலின்மீது மோசடியான முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதென்றும் அல்லது அளிப்பானது சட்டமுறையான இருப்பாட்சியாளர் அல்லாத ஆளொருவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 104அ, 104ஆ, 104இ மற்றும் 104ஈ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 104அ, 104ஆ, 104இ மற்றும் 104ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பொய்யான தகவலின் மீது அளிப்பைப் பெற்றுக் கொண்ட பற்றுநிலச் சொந்தக் காரருக்கான அறிவித்தல்

104அ. (1) அளிப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கென ஒரு பற்றுநிலச் சொந்தக்காரர் வேண்டுமென்று பொய்யான தகவலை அளித்துள்ளார் அல்லது அளிப்பானது சட்டமுறையான இருப்பாட்சியாளர் அல்லாத ஆளொருவருக்கு வழங்கப்பட்டுள்ளது என, விடயத்துக்கேற்ப, கிடைக்கக்கூடியவாறாகவுள்ள அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பற்றுநிலத்தின் உரித்துக்கான அக்கறையொன்றைக் கொண்டுள்ள ஆளொருவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின்மீது காணி ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றினால், காணி ஆணையாளர் தலைமையதிபதி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு பற்றுநிலச் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவொரு தேதியிலும், ஒருநேரத்திலும், ஓரிடத்திலும் காணி ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சொந்தக்காரரினால் போதிய முரணான காரணம் காட்டப்பட்டாலொழிய, காட்டப்பட்ட காரணங்களுக்காக அத்தகைய பற்றுநிலம் தொடர்பில் வழங்கப்பட்ட அளிப்பு இல்லாதாக்கப்படலாமென அத்தகைய அறிவித்தல் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) காணி ஆணையாளர் தலைமையதிபதி, கிடைக்கக்கூடியவாறாகவுள்ள தகவலின்மீது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பற்றுநிலத்தின் உரித்துக்கான அக்கறையொன்றைக் கொண்டுள்ள ஆளொருவருக்கு அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று சேர்ப்பிக்கப்படுவதனையும் செய்வித்தல் வேண்டும்.

காரணம் காட்டுவதற்காக அனுமதிக்கப் பட்ட காலப்பகுதி

104ஆ. பிரிவு 104அ வின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட தேதி யானது, சொந்தக்காரருக்கு அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குக் குறைவாகவிருத்தலாகாது.

அறிவித்த லானது காணியின் மீது தபாலிலிடப் படுதலும் அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களுக்கு சேர்ப்பிக்கப் படுதலும் வேண்டும்

104இ. (1) அறிவித்தலானது பதிவஞ்சலினூடாகப் பற்றுநிலச் சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அறிவித்தலின் பிரதியொன்று பற்றுநிலத்தின் மீது துலாம்பரமானவோரிடத்தில் ஒட்டப்படுதலும் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்த லொன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ள சொந்தக் காரரொருவரை உரிய விழிப்புக்கவனத் தைப் பிரயோகிப்பதன்மூலம் கண்டு பிடிக்கமுடியாதுள்ளவிடத்து, அதன் பிரதியொன்று அத்தகைய சொந்தக்கார ரின் எவரேனும் குடும்பவுறுப்பினரிடம் அல்லது அவருடன் வதிகின்றவோர் ஆளிடம் விட்டுவைக்கப்படின், அச்சொந்தக்காரருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவ்வறிவித்தல் அவ்வாறு சேர்ப்பிக்கப் படமுடியுமானவராகவுள்ள அச்சொந்தக் காரரின் குடும்பவுறுப்பினர் எவரும் இராதவிடத்து, சொந்தக்காரர் வழமை யாக வதிகின்ற வீட்டின் அல்லது மனை யின் ஏதேனும் துலாம்பரமான பாகத்தில் அதன் பிரதியொன்று ஒட்டப்படின், அவ்வறிவித்தல் அச்சொந்தக்காரருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அளிப்பை இல்லாதாக்குதல்*

104ஈ. (1) அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப் பட்டுள்ள ஆளொருவர், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலும், நேரத்திலும், இடத்திலும் தோன்றத் தவறுமிடத்து அல்லது தோன்றியிருந்து, அளிப்பு ஏன் இல்லாதாக்கப்படு தலாகாது எனக் காட்டுவதற்கான காரணமெதுவும் தனக்கில்லையெனக் கூறுமிடத்து, காணி ஆணை யாளர் தலைமையதிபதி, அத்தகைய அறிவித்தல் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும் அளிப்பு மோசடியானமுறையில் பெற்றுக்கொள்ளப்பட் டுள்ளதென்றும் காணி ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படின், அத்தகைய அளிப்பின் இல்லாதாக்குகைமீது காணிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கு அத்தகைய விதப்புரைகளுக்கான காரணங்களுடன் சேர்த்து விதப்புரைகளைச் செய்யலாம்.

(2) அமைச்சர், தேவையானவிடத்து, அத்தகைய விதப்புரைகள் தொடர்பில் காணி ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து மேலதிகத் தெளிவு படுத்துகைகளைக் கோரலாம்.

(3) அளிப்பை இல்லாதாக்குவதற்கான காரணங்கள் இருந்துள்ளதென அமைச்சர் திருப்திப் படுமிடத்து, அமைச்சர், காணி ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரை களைச் சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, காணி ஆணையாளர் தலைமை அதிபதியின் விதப்புரைகளைக் கவனத்துட்கொண்ட பின்னர் அளிப்பை இல்லாதாக்குவதா அல்லவா என்பதுபற்றிய கட்டளையை ஆக்கலாம்.

(5) சனாதிபதியின் கட்டளை பெறப்பட்டதன்மேல், காணி ஆணையாளர் தலைமையதிபதி பிரிவு 104இ இல் குறிப்பீடுசெய்யப்பட்ட இயைபான ஆட்களுக்கு அத்தகைய கட்டளை பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் சனாதிபதியின் கட்டளைக்கு இணங்கியொழுகுவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுத்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவு, அதன் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஏஅ) இச்சட்டத்தின்கீழ் பற்றுநிலத்தைக் கையுதிர்க்கும்போது அல்லது ஈடுவைக்கும்போது பற்றுநிலச் சொந்தக்காரரினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;".

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

"**மூன்றாம் அட்டவணை**

[பிரிவுகள் 51 மற்றும் 72]

**விதிகள்**

1. (அ) அடுத்துறுநரொருவர் எந்த உறவினர்கள் தொகுதியிலிருந்து 51 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகப் பெயர்குறித்து நியமிக்கப்படலாமோ அந்த உறவினர்கள் தொகுதி இறுதியிற்சேர்க்கப்பட்ட பட்டியலில் எடுத்துக்கூறப் பட்டவாறாக விருத்தல் வேண்டும்.

(ஆ) பிரிவு 72 இன் நோக்கங்களுக்காக ஒரு பற்றுநிலத்தின் அல்லது காணியின் உரித்து, இறுதியிற்சேர்க்கப்பட்ட பட்டியலில் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் அல்லது சொந்தக்காரரின் உறவினர்கள் தொகுதி எந்த முன்னுரிமை ஒழுங்குவரிசையின்படி முறையே குறிப்பிடப்படுகின்றனரோ அந்த முன்னுரிமை ஒழுங்குவரிசையின்படி அவர்களுள் ஒருவரை மட்டுமே வந்தடைதல் வேண்டும். ஏதேனும் தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட உறவினர்கள் இருக்குமிடத்து மூத்தவர் இளையவரிலும்பார்க்க முந்துரிமைபெறுதல் வேண்டும்.

(இ) இறுதியிற்சேர்க்கப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் உறவினர்கள் தொகுதியில், பற்றுநிலத்துக்கு அல்லது காணிக்குச் சமமாக உரித்துடையோரும் பற்றுநிலத்துக்கான அல்லது காணிக்கான உரித்துக்கு அடுத்துறுவதற்கு விரும்பு வோருமான ஒரேவயதினரான இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஆட்கள் உள்ளவிடத்து, பற்றுநிலத்துக்கான அல்லது காணிக்கான உரித்து, அக்காணி அமைந்துள்ள இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரி னால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களை வந்தடைதல் வேண்டும்.

(ஈ) மேலே பந்திகள் (ஆ) மற்றும் (இ) என்பவற்றின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பி னும் -

(i) இறுதியிற்சேர்க்கப்பட்ட பட்டியலில் எந்த ஆள் முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளாரோ, முன்னுரிமை ஒழுங்குவரிசையிலுள்ள அந்த எவரேனுமாள் அத்தகைய காணியை அபிவிருத்திசெய்திருக்கு மிடத்து, பற்றுநிலத்துக்கான அல்லது காணிக்கான உரித்து, (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மூத்த ஆளை வந்தடைத லாகாது ஆனால் அத்தகைய காணியை அபிவிருத்திசெய்த ஆளை வந்தடைதல் வேண்டும்; அல்லது

(ii) இறுதியாகச்சேர்க்கப்பட்ட பட்டியலில் முன்னுரிமை ஒழுங்குவரிசை யிலுள்ள எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளனரோ அவர்கள் காணியை அபிவிருத்திசெய்திருக்குமிடத்து, பற்றுநிலத்துக்கான அல்லது காணிக்கான உரித்து, அத்தகைய காணியை அபிவிருத்திசெய்த அத்தகைய ஆட்களை வந்தடைதல் வேண்டும்.

2. இவ்விதிகளின் ஏற்பாடுகளின்கீழ் பற்றுநிலமொன்றுக்கான அல்லது காணிக்கான உரித்து எந்த உறவினரை வந்தடைகின்றதோ அந்த எவரேனும் உறவினர் அத்தகைய பற்றுநிலத்துக்கு அல்லது காணிக்கு அடுத்துறுவதற்கு விரும்பாவிடின், அதற்கான உரித்து, விதி 1 இன் ஏற்பாடுகளுக்கமைய அடுத்துறு வதற்கு அடுத்தவராக உரித்துடையவராகவுள்ள உறவினரை வந்தடைதல் வேண்டும்.

3. பிரதேச செயலாளர் அவர் முன்னருள்ள முக்கியமான நிகழ்வுகள்பற்றித் திருப்திப்படுவதன்மீதும் அவரினாற் குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காகவும் உட்பிரிவிடுகைக் கூறு தொடர்பிலான விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும், சட்டங்களுக்கும் அல்லது இயைபான உள்ளூரதிகாரசபையினாலும், 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளினாலும், (453 ஆம் அத்தியாயமான) நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தினாலும் குறித்துரைக் கப்பட்ட குறைந்தபட்சப் பின்னத்துக்கும் இணங்க விதி 1 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய ஆளை அல்லது ஆட்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

**பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | பிள்ளைகள் | (iv) | உடன்பிறந்தோர் |
| (ii) | பேரப்பிள்ளைகள் | (v) | மாமாமாரும் மாமிமாரும் |
| (iii) | பெற்றோர் | (vi) | மருமகன்மாரும் மருமகள்மாரும் |

இவ்விதியில் -

"பிள்ளை" என்பது, சட்டத்துக்கிணங்க மகவேற்கப்பட்டவொரு பிள்ளையை உள்ளடக்கும்; அத்துடன்

"உறவினர்" என்பது, சட்டத்துக்கிணங்க இரத்த உறவின்மூலமான அல்லது மகவேற்பின்மூலமான ஓர் உறவினர் என்று பொருளாகுமென்பதுடன் திருமணத்தின்மூலமானவோர் உறவினரை உள்ளடக்குதலுமாகாது.".

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*